முதலமைச்சர் கோப்பை - 2024

மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் நேற்று பதக்கம் பெற்றவர்கள்!

தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, அக். 22 - தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடத்தப்படும் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை - 2024 மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 10 -09- 2024 சிவகங்கை மாவட்ட விளையாட்டு அரங்கில் தொடங்கி வைத்தார். மாவட்ட, மண்டல அளவில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுப் பிரிவினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் தமிழ் நாடு அரசு ஊழியர்கள் என மொத்தம் 11,56,566 நபர்கள் 36 வகையான விளையாட்டு போட்டிகளில், 168 பிரிவுகளில் கலந்துக் கொண்டனர். சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் செங்கல்பட்டு ஆகிய நகரங்களில் அக்டோபர் 4ஆம் தேதி முதல் 24ஆம் தேதி வரை, மாவட்ட, மண்டல அளவில் வெற்றி பெற்ற 33,000 நபர்கள் பங்கு பெறும், மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை - 2024 போட்டிகள், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் 04 -10- 2024 சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில் தொடங்கி வைக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்று வருகிறது.

மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் நேற்று (21.10.2024) பதக்கம் பெற்றவர்களின் விபரங்கள் :

நீச்சல் பிரிவு: பள்ளி மாணவர் (200m Individual Medley) இடம்: AGB COMPLEX, வேளச்சேரி

M.S. நித்தீஷ் - திருநெல்வேலி - தங்கம்.,

S. ராஜ் - செங்கல்பட்டு - வெள்ளி,

சர்வேபள்ளி சாய் ஆதித்யா - சென்னை - வெண்கலம்,

விளையாட்டு: நீச்சல் பிரிவு: பள்ளி மாணவியர்(200m Individual Medley) இடம்: AGB COMPLEX,

ஸ்ரீநிதி நடேசன் - சென்னை - தங்கம்,

B. ரோஷினி - மதுரை - வெள்ளி,

அக்ரிதி மாலினி சபத் - செங்கல்பட்டு - வெண்கலம்,

விளையாட்டு: நீச்சல் பிரிவு: பள்ளி மாணவர்(100m Butterfly) இடம்: AGB COMPLEX,

R.V. குருலால் - திருநெல்வேலி - தங்கம்,

V. கவின்ராஜ் - சென்னை - வெள்ளி,

S. சக்தி - ஈரோடு - வெண்கலம்,

விளையாட்டு: நீச்சல் பிரிவு: பள்ளி மாணவர்(50m Freestyle) இடம்: AGB COMPLEX,

A. ஷான் ரோஹித் - திருநெல்வேலி - தங்கம்,

B. பிருத்வி - திருச்சி - வெள்ளி,

S. சாய் தீபக் - சென்னை - வெண்கலம்,

விளையாட்டு: நீச்சல் பிரிவு: பள்ளி மாணவியர்(50m Freestyle) இடம்: AGB COMPLEX,

கதீஜா துல் குபார் - சென்னை - தங்கம்,

B. கரிஷ்மா - ஈரோடு - வெள்ளி,

A.அமலா கிறிஸ்டி - திருநெல்வேலி - வெண்கலம்,

விளையாட்டு: நீச்சல் பிரிவு: பள்ளி மாணவர்(100m Breaststroke) இடம்: AGB COMPLEX,

S. கிரிஷி கெய்ஷவ் - திருவள்ளூர் - தங்கம்,

அஹில் பிலாஜி - கோயம்புத்தூர் - வெள்ளி,

J. சஞ்சய் ஜேசுவா - திருநெல்வேலி - வெண்கலம்,

விளையாட்டு: நீச்சல் பிரிவு: பள்ளி மாணவியர்(100m Breaststroke) இடம்: AGB COMPLEX,

S. மரியா வின்சியா - திருநெல்வேலி - தங்கம்,

பிரமிதி ஞானசேகரன் - சென்னை - வெள்ளி,

J. அர்சனா - திருப்பூர் - வெண்கலம்,

விளையாட்டு: நீச்சல் பிரிவு: பள்ளி மாணவியர்(100m Butterfly) இடம்: AGB COMPLEX,

ஸ்ரீநிதி நடேசன் - சென்னை - தங்கம்,

B. ரோஷினி - மதுரை - வெள்ளி,

P.ஷஷினி - திருநெல்வேலி - வெண்கலம்,

விளையாட்டு: நீச்சல் பிரிவு: பள்ளி மாணவியர்(50m Breaststroke) இடம்: AGB COMPLEX,

P. பிரேஷேதா - திருவள்ளூர் - தங்கம்,

S.V. ஹாசினி - சென்னை - வெள்ளி,

சகாய ரான்ஸ் - திருநெல்வேலி - வெண்கலம்,

விளையாட்டு: நீச்சல் பிரிவு: பள்ளி மாணவர்(50m Breaststroke) இடம்: AGB COMPLEX,

M.S. நித்தீஷ் - திருநெல்வேலி - தங்கம்,

R. தர்ஷன் - சென்னை - வெள்ளி,

K.M. ஆதிசேஷன் - கோயம்புத்தூர் - வெண்கலம்,

விளையாட்டு: பளுத்தூக்குதல் பிரிவு: பள்ளி மாணவியர் (59kg) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

S. அக்ஷிதா - சென்னை - தங்கம்,

K. தன்ஷிதா - மதுரை - வெள்ளி,

R. பூஜா - இராணிப்பேட்டை - வெண்கலம்,

விளையாட்டு: பளுத்தூக்குதல் பிரிவு: பள்ளி மாணவியர் (64kg) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

K. செண்பகவள்ளி - தூத்துக்குடி - தங்கம்,

S. அனுஸ்ரீ - வேலூர் - வெள்ளி,

S. ஜெயஸ்ரீ - வேலூர் - வெண்கலம்,

விளையாட்டு: பளுத்தூக்குதல் பிரிவு: பள்ளி மாணவியர் (71kg) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

M. மீராலக்ஷ்மி - தூத்துக்குடி - தங்கம்,

E.பிரியதர்ஷினி - வேலூர் - வெள்ளி,

R. சந்தியா - கோயம்புத்தூர் - வெண்கலம்,

விளையாட்டு: டென்னிஸ் பிரிவு: பள்ளி மாணவியர் (ஒற்றையர்) இடம்: Tennis Stadium (நூங்கம் பாக்கம்)

ஸ்ரீ சைலேஷ்வரி - திருப்பூர் - தங்கம்,

சவிதா புவனேஷ்வரன் - சென்னை - வெள்ளி,

ஹரிதாஸ்ரீ வெங்கடேஷ் - திருவள்ளூர் - வெண்கலம்,

விளையாட்டு: டென்னிஸ் பிரிவு: பள்ளி மாணவர் (ஒற்றையர்) இடம்: Tennis Stadium (நூங்கம்பாக்கம்)

G. ரோகித் - கோயம்புத்தூர் - தங்கம்,

V. திருமுருகன் - கரூர் - வெள்ளி,

லெவின் - திருநெல்வேலி - வெண்கலம்,

விளையாட்டு: கேரம் பிரிவு: கல்லூரி மாணவியர் (ஒற்றையர்) இடம்: மாவட்ட விளையாட்டு வளாகம் திருச்சி

S. விஜயதர்ஷினி - திருவாரூர் - தங்கம்,

C.S.S. ரக்ஷா - சிவகங்கை - வெள்ளி,

L. ராஜேஷ்வரி - சேலம் - வெண்கலம்,

விளையாட்டு: கேரம் பிரிவு: கல்லூரி மாணவியர் (இரட்டையர்) இடம்: மாவட்ட விளையாட்டு வளாகம் திருச்சி

J.தர்ஷிதா & H. அஸ்விகா - மதுரை - தங்கம்,

S.தாரணி & S. அர்சனா - சிவகங்கை - வெள்ளி,

D. காவேரி & M. வைஷ்ணவி - கோயம்புத்தூர் - வெண்கலம்,

விளையாட்டு: Track Cycling பிரிவு: : பள்ளி மாணவர் இடம்: TNPESU, செங்கல்பட்டு

S. சத்யன் - சென்னை - தங்கம்,

ரோஹன் ஜான் செபாஸ்டியன் - சென்னை - வெள்ளி,

S. பிரணேஷ் - கோயம்புத்தூர் - வெண்கலம்,

விளையாட்டு: Track Cycling பிரிவு: : பள்ளி மாணவியர் இடம்: TNPESU, செங்கல்பட்டு

ஜெய் ஜயோஷ்னா - சென்னை - தங்கம்,

தபிதா - கோயம்புத்தூர் - வெள்ளி,

J. நிறைமதி - தூத்துக்குடி - வெண்கலம்,

விளையாட்டு: Track Cycling பிரிவு: : கல்லூரி மாணவர் இடம்: TNPESU, செங்கல்பட்டு

சஞ்சய் சரவணன் - கோயம்புத்தூர் - தங்கம்,

கிஷோர் - புதுக்கோட்டை - வெள்ளி,

புருஷோத்தமன் - கோயம்புத்தூர் - வெண்கலம்,

விளையாட்டு: Track Cycling பிரிவு: : கல்லூரி மாணவியர் இடம்: TNPESU, செங்கல்பட்டு

J. ஸ்ரீமதி - தூத்துக்குடி - தங்கம்,

தன்யதா - செங்கல்பட்டு - வெள்ளி,

M. பூஜா ஸ்வேதா - கோயம்புத்தூர் - வெண்கலம்,

விளையாட்டு: வாள் வீச்சு பிரிவு: : கல்லூரி மாணவர்(Foil) இடம்: நேரு விளையாட்டரங்கம்

M. மாரீஸ்வரன் - செங்கல்பட்டு - தங்கம்,

S.K. அரவிந்த் - கன்னியாகுமரி - வெள்ளி,

S. கவின் - நாமக்கல் - வெண்கலம்,

N.R.S. பிரவீன் - செங்கல்பட்டு - வெண்கலம்,

விளையாட்டு: வாள் வீச்சு பிரிவு: : கல்லூரி மாணவர்(Epee) இடம்: நேரு விளையாட்டரங்கம்

V. சந்தோஷ் - செங்கல்பட்டு - தங்கம்,

T.R. ஸ்ரீ சரவணன் - செங்கல்பட்டு - வெள்ளி,

M. கோகுல் - செங்கல்பட்டு - வெண்கலம்,

K. கவின் - சேலம் - வெண்கலம்,

விளையாட்டு: வாள் வீச்சு பிரிவு: : கல்லூரி மாணவர்(Saber) இடம்: நேரு விளையாட்டரங்கம்

M. அரவித ரிஷோ - செங்கல்பட்டு - தங்கம்,

J.V. டாமின் ரிஷோ - கோயம்புத்தூர் - வெள்ளி,

M. சந்தோஷ் - நாமக்கல் - வெண்கலம்,

K. வினேஷ் - கன்னியாகுமரி - வெண்கலம்,

விளையாட்டு: வாள் வீச்சு பிரிவு: : கல்லூரி மாணவியர்(Foil) இடம்: நேரு விளையாட்டரங்கம்

S. ஜாய்ஸ் அஷிதா - சென்னை - தங்கம்,

A. ஜானகி பிரியா - திருநெல்வேலி - வெள்ளி,

B. ஸ்வர்ண பிரபா - திண்டுக்கல் - வெண்கலம்,

D. திவ்ய தர்ஷினி - சென்னை - வெண்கலம்,

விளையாட்டு: வாள் வீச்சு பிரிவு: : கல்லூரி மாணவியர்(Saber) இடம்: நேரு விளையாட்டரங்கம்

S. புவனேஷ்வரி - சேலம் - தங்கம்,

B.S. பந்தேஜா - சென்னை - வெள்ளி,

R.M. போஷிகா - சென்னை - வெண்கலம்,

S. காருண்யா - திண்டுக்கல் - வெண்கலம்

இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பதக்கப் பட்டியல் முதலமைச்சர் கோப்பை 2024 (21.10.2024)

வ.எண்	மாவட்டம்	தங்கம்	வெள்ளி	வெண்கலம்	மொத்தம்
1	சென்னை	84	65	65	214
2	செங்கல்பட்டு	24	19	19	62
3	கோயம்புத்தூர்	19	32	32	83
4	சேலம்	17	11	17	45
5	திண்டுக்கல்	13	4	9	26
6	ஈரோடு	11	11	12	34
7	திருநெல்வேலி	11	9	14	34
8	மதுரை	8	10	12	30
9	திருவள்ளூர்	7	6	13	26
10	கன்னியாகுமரி	5	5	14	24
11	தூத்துக்குடி	5	3	7	15
12	வேலூர்	4	9	12	25
13	திருச்சிராப்பள்ளி	4	4	12	20
14	நாமக்கல்	4	4	6	14
15	தஞ்சாவூர்	4	1	8	13
16	தேனி	3	7	11	21
17	திருப்பூர்	3	4	7	14
18	கரூர்	3	3	9	15
19	கிருஷ்ணகிரி	3	3	7	13
20	புதுக்கோட்டை	3	3	6	12
21	சிவகங்கை	2	6	2	10
22	விருதுநகர்	2	4	2	8
23	பெரம்பலூர்	2	0	2	4
24	திருவண்ணாமலை	1	5	0	6
25	காஞ்சிபுரம்	1	4	5	10
26	தர்மபுரி	1	3	0	4
27	ராணிப்பேட்டை	1	1	3	5
28	விழுப்புரம்	1	0	3	4
29	திருவாரூர்	1	0	2	3
30	அரியலூர்	1	0	0	1
30	நாகப்பட்டினம்	1	0	0	1
32	கடலூர்	0	5	4	9
33	இராமநாதபுரம்	0	4	3	7
34	மயிலாடுதுறை	0	2	2	4
35	தென்காசி	0	1	1	2
36	கள்ளக்குறிச்சி	0	1	0	1
37	திருப்பத்தூர்	0	0	2	2
38	நீலகிரி	0	0	1	1

சென்னை வடகிழக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் வடகரை எஸ்.விஜி – சுந்தரி ஆகியோர் இல்லத் திருமணத்தில், மாதவரம் வடக்குப் பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திய போது எடுத்த படம். நெசவாளர் அணி மாவட்ட தலைவர் இ.பாஸ்கரன், மாவட்ட பிரதிநிதி சூரப்பட்டு எஸ்.கே. அன்பழகன், அருமந்தை ஊராட்சி மன்ற தலைவர் சி.விக்ரமன், ஜி.முனிவேல், திருநிலை சதீஷ்குமார், செங்குன்றம் பிரேம்குமார், செட்டிமேடு சங்கர், புள்ளிலைன் ராம்தாஸ் மற்றும் நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர்

பரூக் அப்துல்லா பிறந்த நாள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

“காஷ்மீர் மாநில உரிமைகளுக்காக சளைக்காமல் போராடுபவர்!”

சென்னை, அக். 22- காஷ்மீர் மாநில உரிமைகளுக்காக சளைக்காமல் போராடுபவர் என்று தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் பரூக் அப்துல்லா பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவரும், நாட்டின் முதுபெரும் அரசியல் தலைவர்களுள் ஒருவருமான பரூக் அப்துல்லா அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவரும், நாட்டின் முதுபெரும் அரசியல் தலைவர்களுள் ஒருவருமான திரு. பரூக் அப்துல்லா அவர்களின் பிறந்தநாளில், காஷ்மீர் மாநிலத்தின் உரிமைகளுக்காகவும் மாண்புக்காகவும் சளைக்காமல் போராடும் அவரது போராட்டத்தை வணங்கி, அவர் நீண்டகாலம் மன அமைதியுடன் திகழ வாழ்த்துகிறேன். அவரது குரல் தொடர்ந்து நீதிக்கான வேட்கைக்கு ஊக்கமளிக்கட்டும்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் தேசிய மாநாட்டுக் கட்சிக்குமான கொள்கை உறவு என்பது பேரறிஞர் அண்ணா காலந்தொட்டு இப்போது வரை, நமது ஒன்றியத்தின் மக்களாட்சி விழுமியங்களைக் காப்பதில் வலிமையுடன் தொடர்ந்து வருகிறது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

வே.ஜெயபாலன் தலைமை! தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

‘திராவிட மாடல்’ அரசின் மூன்றாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

பேரா.சுப.வீரபாண்டியன் - சைதை சாதிக் சிறப்புரை!

தென்காசி, அக். 22 - தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி திராவிட மாடல் அரசின் மூன்றாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம், சுந்தரபாண்டியபுரம் பேருந்து நிலையம் அருகில் 19ஆம் தேதி மாலை 6 மணி அளவில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில், மாவட்ட துணைச் செயலாளர் கென்னடி, மாவட்டப் பொருளாளர் ஷெரிப், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மா.செல்லத்துரை, முத்துபாண்டி, ஆறுமுகச்சாமி, சேசுராஜன், சேக்தாவுது, பொதுக்குழு உறுப்பினர்கள் ரஹீம், அருள், இராஜேஸ்வரன், கதிர்வேல் முருகன், சாமிதுரை, தமிழ்ச்செல்வி, ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

பேரூர்க் கழகச் செயலாளர் பண்டாரம் வரவேற்புரையாற்றினார்.

நிகழ்ச்சியை தென்காசி கிழக்கு ஒன்றியச் செயலாளர் அழகுசுந்தரம் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர், சமூக நீதிக் கண்காணிப்புக் குழு தலைவர் பேரா.சுப.வீரபாண்டியன், தலைமைக் கழகப் பேச்சாளர் சைதை சாதிக் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

பின்னர் திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன் பேசியதாவது:-

75 ஆண்டு காலம் கட்சியின் சின்னமும் கொடியும் மாறாமல் உள்ள இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி உலகமெங்கும் புகழ்பெற்றுள்ளது.

திராவிட மாடல் ஆட்சியை எந்தவிதமான குறையும் கூறமுடியாதால், அ.தி.மு.க.வால் எந்த விதமான பொதுக்கூட்டங்களையும் நடத்த முடியவில்லை. மூன்றாண்டுகளில் தளபதி அவர்கள் பெற்றுள்ள வெற்றியும் அவர்கள் செய்துள்ள சாதனைகளையும் வேறு எந்த கட்சியும் செய்ய முடியாது. 2019ல் மக்களவைத் தேர்தலில் 40க்கு 39 தொகுதிகளில் வெற்றி பெற்ற தி.மு.க. 1967 மற்றும் 1971-ஆம் ஆண்டில் தி.மு.க. தொடர்ந்து வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது. வரும் 2026 சட்ட மன்றத் தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று சாதனை படைக்கும். திராவிட மாடல் ஆட்சியை வீடு, வீடாகச் சென்று தி.மு.க.வினர் சேர்க்க வேண்டும்.

இவ்வாறு திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் பேரா. சுப.வீரபாண்டியன் பேசினார்.

கூட்டத்தில் ஒன்றியச் செயலாளர்கள் செல்லத்துரை, அன்பழகன், சிவன் பாண்டியன், ரவிசங்கர், மாரி வண்ணமுத்து, மகேஷ் மாயவன், ஜெயக்குமார், சீனித்துரை, திவான் ஒலி, சுரேஷ், நகரச் செயலாளர்கள் சாதிர், வெங்கடேசன், அப்பாஸ், கணேசன், பேரூர்ச் செயலாளர்கள் அழகேசன், முத்தையா, ராஜராஜன், வெள்ளத்துரை, குட்டி என்ற சங்கர், சுடலை முத்து, நெல்சன், லட்சுமணன், கோபால், சிதம்பரம், தங்கப்பா என்ற முகமது உசேன், ஜெகதீசன், கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபூர் ரகுமான், தலைமைக் கழக பேச்சாளர் கடையநல்லூர் இஸ்மாயில் உள்பட மாவட்ட அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள், சுந்தர பாண்டியபுரம் பேரூர்க் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக பேச்சாளர்கள், கழகத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் சுந்தர பாண்டியபுரம் பேரூராட்சி மன்றத் தலைவர் காளியம்மாள் செல்வகுமார் நன்றி யுரையாற்றினார்.

நாமக்கல்லில்

15,000 க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை முதல்வர் வழங்குகிறார்!

மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தகவல்!

நாமக்கல், அக். 22 - நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளையின் 136வது பிறந்த நாள் விழா, நாமக்கல்லில் உள்ள அவரது நினைவு இல்லத்தில், அரசு சார்பில், சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் எம்.எல்.ஏ பெ.ராமலிங்கம், மாவட்ட ஆட்சியர் ச. உமா, கவிஞரின் உறவினர்கள் உள்ளிட்டோர் கவிஞரின் மார்பளவு சிலைக்கு மலர்கள் தூவியும் மாலை அணிவித்தும் மரியாதை செலுத்தினர்.

பின்னர் நாமக்கல் கவிஞர் இல்லத்தில் செய்தியாளர்களிடம் பேசிய கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி, சுதந்திரப் போராட்டத்திற்கு பங்காற்றிய நாமக்கல் கவிஞருக்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் அவரது இல்லத்தில் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்படு கிறது.

இன்று (22.10.2024 - செவ்வாய்க்கிழமை), தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாமக்கல் மாவட்டத்திற்கு வருகை தந்து புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைத்து, முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்து 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார்.

முன்னதாக, அன்று நண்பகல் நாமக்கல் பரமத்தி சாலையில் புதிதாக அமைக்கப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைக்க உள்ளார். அதன் பின்னர் பிற்பகல் 3 மணிக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளார். இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் முழு வீச்சில் மேற்கொண்டுள்ளது என்றும், தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதலமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மதுரபாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் மு.வேல்முருகன், அமுதா வேல்முருகன் ஆகியோரின் அமுதம் சூப்பர் மார்க்கெட் அமுதம் டெக்ஸ் புதிய கிளை திறப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி திறந்து வைத்தார். உடன் மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ். இந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.